## கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை (நிகழ்நிலை), ஆண்டு I - 2021

# இலங்கையின் சட்ட முறைமை

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: **06**
வினாத்தாள் பக்கங்களின் எண்ணிக்கை: **05**

**மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

01. இலங்கையில் பிரயோகிக்கப்படுகின்ற உரோம டச்சுச் சட்ட மூலாதாரங்கள் காலப்போக்கில் படிவளர்ச்சியுற்றிருப்பதுடன், அவை நாட்டின் சட்ட பல்வகைத்தன்மையின் செலுமையையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. எனினும், 1799 ஆம் ஆண்டு பிரகடனத்தின் மட்டுப்படுத்தப்பட்டதான பொருள்கோடலானது உரேம டச்சுச் சட்டத்தின் வளர்ச்சி மற்றும் இலங்கை சட்ட முறைமைமைக்கு அது வழங்கக் கூடியதான பங்களிப்பு என்பவற்றை சீர்க்குலைத்துள்ளது.

    மேற்கூறிய கூற்றை பொருத்தமான சட்ட அதிகார ஆதாரங்களைச் சுட்டிக்காட்டி ஆராய்க.

    (100 புள்ளிகள்)

02. சரத் என்பவன் தன்னிடமுள்ள சோளம் இருப்புத்தொகுதியினை ரூபா.200,000/= விற்கு விற்பனை செய்யவுள்ளதாகவும் அதனை விமல் வாங்குவதாக இருப்பின் நான்கு நாட்களுக்குள் அவன் பணத்தை கொண்டுவர வேண்டுமெனக் கூறி நிமலுக்கு கடிதமொன்றை எழுதினான். அதற்கு பதிலளிக்கும் வகையில் நிமல், ரூபா.50,000/= முற்பணமாக அனுப்பியதோடு முழுத்தொகையை 10 நாட்களுக்குள் செலுத்துவதாகவும் தெரிவித்திருந்தான். எனினும் 10 நாட்களுக்குள் முழுத்தொகையைச் செலுத்த நிமல் தவறிவிட்டான். அதேவேளை சரத்திற்கு சுனில் என்பனிடமிருந்து நல்ல விலை கிடைக்கப்பெற்றதோடு அவன் சோளம் இருப்புத்தொகுதியினை சுனிலிற்கு விற்பனை செய்தான். ஆங்கிலச் சட்டத்தின் கீழ் ஒப்பந்தங்களுக்கு ஏற்புடையதாகும் பெறுமதியான பிரதிபயன் (Valuable Consideration) எனும் கருத்தேற்பிற்கமைய தனக்கும் சரத்திற்குமிடையே வலிதான ஒப்பந்தமொன்று உருவாகியுள்ளதாக நிமல் வாதிடுகிறான். நிமல் சரியான நேரத்தில் செயற்படத் தவறியதால், நிமாலின் செயலை வலிதான

ஒப்பந்தமாகக் கருதாமல் இருப்பதற்கு தனக்கு ஒரு நல்ல காரணம் (*justa causa*) இருப்பதாக சரத் வாதிடுகின்றான்.

இலங்கையில் ஆங்கிலச் சட்டத்தில் பிரயோகிக்கப்படும் பெறுமதியான பிரதிபயன் (Valuable Consideration) என்பதுடன் விசேட கவனஞ்செலுத்தி மேற்கண்ட தரப்பினருக்கு ஆலோசனை கூறுக. பொருத்தமான சட்ட அதிகாரக ஆதாரங்களைக் கொண்டு உமது விடையினை ஆதாரப்படுத்துக. இலங்கையின் சட்டமுறைமையில் ஆங்கிலச் சட்டத்தின் முழுமையான ஏற்புடைமையினைப் பயன்படுத்தி உமது விடையினை ஆதாரப்படுத்தலாம்.

(100 புள்ளிகள்)

03. **(அ) மற்றும் (ஆ)** ஆகிய **இரண்டுக்குமே** விடை தருக.

அ. 'கண்டியச் சட்டமானது தம்மை கண்டியர்கள் என அடையாளப்படுத்திக் கொள்பவர்களுக்கு ஏற்புடையதாகும். 1815ஆம் ஆண்டு பிரித்தானியர்கள் அவர்களைக் கைப்பற்றிய போது கண்டி மற்றும் அதற்கு அண்டிய பகுதிகளில் அவர்கள் வசித்தவர்களாவர்.'

நீர் உடன்படுகின்றீரா? மேற்கூறிய கூற்றை கண்டியச் சட்டமானது ஒரு விசேட சட்டம் என்ற வகையில் அதன் ஏற்புடைமையின் பின்னணியில் ஆராய்க. உமது விடையை பொருத்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்ட அதிகார ஆதாரங்களைக் கொண்டு ஆதாரப்படுத்துக.

ஆ. ரன் மெனிக்கா என்பவள் தெல்தெனியவைச் சேர்ந்த ரன் தெனிய குடும்பத்தின் இளைய மகளாவாள். அவள் காலியில் வசிக்கும் ஜேர்மனிய நாட்டவரும் இலங்கை மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் இரட்டை பிரசாவுரிமையையும் கொண்ட டேவிட் என்பவனை திருமணம் செய்துகொண்டாள். அவர்களது திருமணத்தின் இரண்டு ஆண்டுகளுக்குப் பின் டேவிட் வியாபார நோக்கத்திற்காக ஜேர்மனிக்கு சென்றதனால் ரன் மெனிக்கா அவளது மகன் ஜோர்ஜுடன் தெல்தெனியவிலுள்ள அவளது மூதாதையர் வீட்டிற்கு வசிக்க வந்தாள். 2018ஆம் ஆண்டு முதல் ரன் மெனிக்கா தனது பரம்பரை வீட்டை திருமணமாகாத தனது மூத்த சகோதரியான பிசோ மெனிக்கா என்பவளுடன் பகிர்ந்துக் கொண்டு தெல்தெனியவில் வசித்துவந்தாள். 2019ஆம் ஆண்டு டேவிட் சென் பீட்டர்ஸ்பர்க்கிற்குப் பயணிக்கும் போது விமான விபத்தொன்றில் இறந்தான். எதிர்பாராத சூழ்நிலைகள் மற்றும் தனது தங்கையின் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக, ரன் மெனிக்காவை அவளது மகனுடன் பரம்பரை வீட்டை உடைமைக்

கொள்ள பிசோ மெனிக்கா அனுமதிக்கின்றாள். தற்போது ஜோர்ஜை கண்டியிலுள்ள சர்வதேச பாடசாலையொன்றில் சேர்ப்பதற்கு தான் பெருமளவிலான பணம் செலவிட வேண்டியுள்ளதாகக் கூறி தெல்தெனியவிலுள்ள ஆதனத்தில் அவளது பங்கை ரன் மெனிக்கா கோருகிறாள். மேலும், ரன் மெனிக்கா 2018ஆம் ஆண்டில் மூதாதையரின் வீட்டில் வசிக்க ஆரம்பித்ததிலிருந்து அவளது தீக திருமணமானது, பின்ன திருமணமொன்றாக மாற்றமடைந்து விட்டதெனவும் கோருகின்றாள்.

கண்டியச் சட்டத்தின் கீழ் ரன் மெனிக்காவிற்குப் பிரயோகிக்கப்படக் கூடியதான சட்ட விளைவுகளை தெளிவுப்படுத்துக. பொருத்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்ட அதிகார ஆதாரங்களைக் கொண்டு உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(50X2=100 புள்ளிகள்)

04. நிகிலா என்பவளது குடும்பத்தினர் அவளது தாய்வழி தாத்தா, பாட்டி கேரளாலிலிருந்து இலங்கைக்கு வருகை தந்ததிலிருந்து யாழ்ப்பாணத்தில் வசித்து வருகின்றனர். நிகிலா, அவளது பெற்றோர் உள்நாட்டு யுத்தத்தின் போது நாட்டை விட்டு வெளியேறியிருந்த போது தென்னிந்தியாவிலுள்ளதொரு சிறிய கிராமத்தில் பிறந்தாள். ஆனால், அவளுக்கு ஒரு வயதாக இருக்கும் போது மீண்டும் அவளது குடும்பத்தினர் யாழ்ப்பாணத்திற்கு திரும்பியதோடு அவளது தாய்க்குச் சொந்தமான பரம்பரை வீடு மற்றும் தந்தைக்கு சொந்தமான காணிகளை மீளப்பெற்றுக் கொண்டனர். அவளது மூன்றாம் நிலைக் கற்கைக்காக கண்டிக்குச் செல்லும் வரை நிகிலா யாழ்ப்பாணத்திலேயே கல்வி கற்றாள். அங்கு அவள் தன்னுடன் கல்வி கற்கும் காலியை சேர்ந்த திஸ்ஸ என்பவன் மீது காதல் கொண்டாள். இவர்கள் பல்கலைக்கழகப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டவுடனேயே திருமணஞ் செய்துக்கொண்டதோடு கண்டி பொது வைத்தியசாலையில் சேவையாற்றுவதற்காக கண்டியிலேயே தங்கிவிட்டனர். நிகிலா அவளது திருமணத்தின் முதல் வருடத்தில் மாதத்திற்கொரு முறை அவளது பெற்றோரைப் பார்க்க சென்றபோதும் பின்னர் அவளும் திஸ்ஸவும் முதுகலை படிப்பிற்காக சிங்கப்பூர் சென்றதனால் அவளால் யாழ்ப்பாணத்திற்கு செல்ல முடியாதுபோனது. ஆறு ஆண்டுகளின் பின் நிகிலா திஸ்ஸவை விவாகரத்து செய்ததுடன் யாழ்ப்பாணத்திலுள்ள அவளது பரம்பரை வீட்டிற்குத் திருப்பினாள். அவளது தாய் புற்றுநோயினால் சுகயீனமடைய முன் ஒரு வருட காலமாக அவள் அங்கு வசித்து வந்ததோடு யாழ்ப்பாண வைத்தியசாலையில் சேவையாற்றி வந்தாள். ஆறு மாதங்களின் பின் அவளது தாய் இறந்தபோது, நிகிலா இறுதிக் கிரியைகளை அவர்களது கிராமத்து கோவிலில் நடாத்தினாள்.

பின்னர் அவளது தாய் பரம்பரை வீட்டைத் தனக்காக விட்டுச் சென்றுள்ளார் என நிகிலா அறிந்துக் கொண்டாள். தமது தாயாருக்கு பரம்பரை ஆதனங்களை அவ்வாறு விட்டுச் செல்வதற்கு எத்தகைய சட்டத் தகைமையும் இல்லை என ரன்தீப் எனும் அவளது சகோதரன் தெரிவிக்கிறான். நிகிலா அந்நியரொருவரை திருமணம் செய்து தனது வீட்டை விட்டு

விலகியிருந்தமையால் அவள் தொடர்ந்து தேசவழமையால் ஆளப்படமாட்டாள் என ரன்தீப் மேலும் குறிப்பிடுகிறான்.

நிகிலா அவளது சகோதரனின் இவ்வலியுறுத்தல்கள் சட்டரீதியாக வலிதானவையா என அறிய விரும்புகிறாள்.

மேலுள்ள பிரச்சனைகளைப் பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்கள் என்பவற்றை சுட்டிக்காட்டி ஆராய்க.

(100 புள்ளிகள்)

05. நிசார் மற்றும் பாத்திமா ஆகிய இருவரும் 1993ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்டனர். அவர்களுக்குச் சொந்த பிள்ளைகள் இல்லாததன் காரணத்தால் அவர்களது திருமணத்தின் ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர், சஹ்ரா என்பவளை மகவேற்பு செய்தனர். பின்னர் நிசார் மற்றும் பாத்திமாவிற்கு தங்களுக்கான சொந்த ஆண் பிள்ளையொன்று கிடைக்கப்பெற அவனுக்கு மொஹமட் என்று பெயர் சூட்டினர். அண்மையில் நிசார் மற்றும் பாத்திமா கார் விபத்திற்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வந்த நிலையில் உயிரிழந்தனர். அவர்கள் இறந்த பின்னர், அவர்களது இயற்கைவழி பிள்ளையான மொஹமட், சஹ்ராவுடன் சண்டையிட்டு உடனடியாக அவளை வீட்டிலிருந்து வெளியேறுமாறு கூறினான். இயற்கைவழி பிள்ளை என்பதனடிப்படையில் நிசார் மற்றும் பாத்திமா ஆகியோரது சட்ட வாரிசாக தான் மாத்திரமே கருதப்படுவதோடு முஸ்லிம் சட்டத்தின் கீழ் அவள் அவர்களது மகளாகக்கூட கருதப்படமாட்டாள் எனவும் அவன் தெரிவித்தான். எவ்வாறாயினும் மொஹமடை போலவே அனைத்து உரிமைகளுக்கும் தானும் சம உரித்துடையவள் என சஹ்ரா வாதிடுவதோடு நிசார் மற்றும் பாத்திமா ஆகியோரது ஆதனங்களின் மீது வழியுரிமையையும் அவள் கோருகின்றாள். அவளது கோரிக்கைக்கு பதிலளித்த மொஹமட், நிசாரினால் நன்கொடை உறுதியொன்றின் மூலம் பரிசாக வழங்கப்பட்ட ரத்மலான வீட்டைத் தவிர்த்து நிசார் மற்றும் பாத்திமா ஆகியோரது சொத்துறுதியற்ற ஆதனங்களின் மீது முஸ்லிம் சட்டத்தின் கீழ் அவள் எவ்வித உரிமையையும் பெற்றுக்கொள்ள மாட்டாள் என்று தெரிவித்தான்.

இது தொடர்பில் சஹ்ரா உமது ஆலோசனையை நாடுகிறாள். பொருத்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களை ஆதாரங்காட்டி அவளுக்கு ஆலோசனை கூறுக.

(100 புள்ளிகள்)

06. ‘‘இலங்கையின் நீதி நிர்வாகத்திற்கான தற்போதைய முறைமை மற்றும் அதன் செயல்திறன் மிக்க தன்மை’’ எனும் தலைப்பின் கீழ் சட்டமாணிப் பட்டத்திற்காக கற்கும் முதலாம் வருட மாணவர்களுக்கு விரிவுரையொன்றை நடாத்துவதற்காக நீர் அழைக்கப்பட்டுள்ளீரெனக் கருதிக்கொள்க.

நீர் உமது விரிவுரையின் போது கவனஞ்செலுத்தும் முக்கிய பகுதிகளை ஆராய்க. தற்போதைய நீதிமன்ற கட்டமைப்பின் படிநிலை மற்றும் அதன் நியாயாதிக்கம் என்பவற்றின் மீது நீர் கவனஞ்செலுத்துவீர் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. மேலும் தற்போதைய முறைமையின் செய்திறன் மிக்க தன்மை மற்றும் தற்போதைய முறைமைக்கு சீர்த்திருத்தங்களைக் கொண்டுவர கட்டாயத் தேவைப்பாடுகள் யாதும் இருக்கின்றதா என்பது தொடர்பிலும் கருத்துரை செய்யுமாறு நீர் எதிர்ப்பார்க்கப்படுகின்றீர்.

(100 புள்ளிகள்)

*************